(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

**இல. 37.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2022 யூன் 08 புதன்கிழமை, மு.ப. 10.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

2260/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள தேசியப் பாடசாலைகள் மற்றும் மாகாணப் பாடசாலைகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் தற்போது நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

2456/2022

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த காலப்பகுதியில் வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்ட புகையிரத நிலையப் பொறுப்பதிகாரிகளின் கோரிக்கைகள் தொடர்பில் இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) முன்னறிவித்தலின்றி மேற்கொள்ளப்படும் இத்தகைய தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கான இயலுமை உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

2466/2022

கௌரவ ரோஹண திஸாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள தேசிய வைத்தியசாலைகள் மற்றும் போதனா வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வைத்தியசாலைகள் அமைந்துள்ள மாவட்டங்கள் யாவை என்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தளை மாவட்டத்தில் தேசிய வைத்தியசாலையொன்றோ அல்லது போதனா வைத்தியசாலையொன்றோ நிறுவப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மாத்தளை மாவட்ட வைத்தியசாலையை மத்திய அரசாங்கத்திற்குச் சுவீகரித்துக்குக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

2564/2022

கௌரவ வடிவேல் சுரேஷ்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எனது கோரிக்கைக்கு அமைவாக தோட்டப்புறங்களில் வாழும் மக்களின் சமய, கலாசார, நலனோம்புகை மற்றும் பிற செயற்பாடுகளுக்காக பயன்படுத்தக்கூடிய வகையில் அப்போதைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு பதுளை மாவட்டத்தில் தோட்டப்புற பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் 16 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் அங்கீகாரம் வழங்கி இதற்காக 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்ததென்பதையும்;

(ii) இதில் 14 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டதென்பதையும்;

(iii) ஆயினும், மேற்படி கலாசார நிலையங்களை நிர்மாணிக்கும் நிகழ்ச்சித்திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க பணிகளுக்கென 20.5 மில்லியன் ரூபா பதுளை மாவட்ட செயலாளருக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி 16 கலாசார நிலையங்களை நிர்மாணிப்பதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் பெற்றுக்கொடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

2568/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி ஒதுக்கீடுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு விரிவுரையாளரின் பெயர் மற்றும் சேவை நிலையம் என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை மேற்படி விரிவுரையாளர்களுக்காக –

(i) அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு;

(ii) அவ்வொதுக்கீட்டில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ள நிதி;

(iii) அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டில் பயன்படுத்தப்படாத நிதி;

ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமை தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

2578/2022

கௌரவ பீ.வை. ஜி. ரத்னசேக்கர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) க.பொ.த (சா/த) வரையிலான கல்விச் சீர்திருத்தங்களும் க.பொ.த (உ/த) வரையிலான கல்விச் சீர்திருத்தங்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி ஒவ்வொரு கல்விச் சீர்திருத்தத்தையும் நடைமுறைப் படுத்துவதற்கு தொடங்கும் திகதி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கல்விச் சீர்த்திருத்தத்திற்கும் அமைவாக மேற்கொள்ளப்படும் முக்கியமான திருத்தங்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) புதிதாக நிறுவப்பட்ட தேசிய பாடசாலைகள் கல்வி அமைச்சினால் நிர்வகிக்கப்படுகின்றனவா அல்லது சம்பந்தப்பட்ட மாகாண சபையினால் நிர்வகிக்கப்படுகின்றனவா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

2633/2022

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் சமையல் எரிவாயு தொடர்பில் சமூக உரையாடலொன்று உருவாகியுள்ளமையை அறிவாரா;

(ii) 2020 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை இலங்கைச் சந்தைக்கு சமையல் எரிவாயுவை வழங்கும் கம்பனிகளின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி கம்பனிகள் யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு கம்பனியினதும் சந்தைப் பங்கு வெவ்வேறாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கம்பனிகளால் வழங்கப்படும் எரிவாயுவின் தரத்தைப் பரிசோதிப்பதற்கு அல்லது ஒழுங்குறுத்துவதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லை என்பதை அறிவாரா;

(ii) எரிவாயுவின் தரத்தைப் பரிசோதிப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அந்நிறுவனங்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை;

(iii) எரிவாயுவின் தரத்தைப் பேணிவருவதற்காக மேற்படி நிறுவனங்களை வலுவூட்டுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

2650/2022

கௌரவ ரஊப் ஹகீம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வியாண்டு 2016 - 2018 தொகுதியைச் சேர்ந்த தேசிய போதனாவியல் டிப்ளோமாதாரிகளுக்கு 2021 சனவரி மாதம் 18 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I(ஆ) தரத்திற்கான நியமனங்கள் வழங்கப்படுகையில், இஸ்லாம் சமய பாடத்தைக் கற்பிப்பதற்காக நியமனங்கள் வழங்கப்பட்டனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நியமனம் பெற்ற ஒவ்வொருவரினதும் பெயர், முகவரி மற்றும் இணைக்கப்பட்ட பாடசாலை என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2022 சனவரி 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 6 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக.

3.

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ஜயமக அபிவிருத்தி, சமூக சேவைகள், அறக்கட்டளை மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 79 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 79

2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 31001 “அரச அலுவலர்களுக்கான முற்பணக் கணக்கு - அரசாங்க தொழிற்சாலை” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 24,000,000 இலிருந்து ரூபா. 20,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2021.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

2022.05.30 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 80 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 80

2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 30602 “களஞ்சியங்கள் முற்பணக் கணக்கு-புகையிரதத் திணைக்களம்” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 1,800,000,000 இலிருந்து ரூபா. 2,000,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 1,800,000,000 இலிருந்து ரூபா. 1,280,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | ரூபா. 7,200,000,000 இலிருந்து ரூபா. 8,600,000,000 வரை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2021.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

2022.05.30 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 3),— 2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 81 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 81

2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 31002 “களஞ்சியங்கள் முற்பணக் கணக்கு-அரசாங்கத் தொழிற்சாலை” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | ரூபா. 120,000,000 இலிருந்து ரூபா. 250,000,000 வரை |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | ரூபா. 40,000,000 இலிருந்து ரூபா. 224,000,000 வரை |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | ரூபா. 30,000,000 இலிருந்து ரூபா. 80,000,000 வரை |

(இக்கட்டளை 2021.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

2022.05.30 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல. 4),— 2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, கீழே குறித்துரைக்கப்பட்ட 82 ஆம் இலக்கக் கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

## 2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 82

2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் செயற்பாட்டு விடய இல. 31003 “வேலை நிறைவு முற்பணக் கணக்கு - அரசாங்கத் தொழிற்சாலை” இற்கு எதிராக குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளையினை ஆக்குவதன் மூலம் மாற்றுகின்றேன்.

| | விடயம் | திருத்தம் |
|---|---|---|
| (i) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (ii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | ரூபா. 440,000,000 இலிருந்து ரூபா. 340,000,000 வரை |
| (iii) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |
| (iv) | அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை | திருத்தப்படவில்லை. |

(இக்கட்டளை 2021.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

ஒப்பம்/ ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

2022.05.30 ஆம் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.5) ,— 2020 இன் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளைகள் கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:-

(இக்கட்டளைகள் 2021.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும். )

அட்டவணை

(இணைக்கப்பட்ட அட்டவணைக்கமைவாக)

**அட்டவணை**

## 2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2021 நிதியாண்டு தொடர்பில் 2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 8 ன் கீழ் நிதி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதன் பிரகாரம், அரசாங்க ஊழியர்களுக்கு முற்பணங்கள் வழங்குவது சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை.

**குழுத்தொடர் இலக்கம். 01**

2020 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 வது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக்கட்டளை மூலம், இதனுடன் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காணப்படுகின்ற விதத்தில் அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகளின் விடய இலக்கங்கள் 00101, 00601, 00701, 01601, 02001, 10301, 11101, 11501, 11701, 11801, 12201, 12601, 13001, 13501, 17601, 18601, 18901, 19301, 19401, 19801, 40101, 40301, 40401, 40501, 40601, 40801, 40901, 41001, 41401, 41601, 41901, 42201, 42401, 42501, 42601, 42701, 42901, 43101, 43301, 43401, 43601, 43701, 43901, 44001, 20801, 21101, 21301, 21501, 21601, 22001, 22201, 22301, 22401, 22501, 23201, 24101, 24601, 25201, 25301, 25701, 26201, 26701, 26801, 26901, 27801, 28101, 28301, 28401, 28501, 28801, 29101, 29801, 30001, 30601, 30801, 31101, 33101 மற்றும் 33401 ஆகியன தொடர்பான அச்சட்டத்தின் மூன்றாவது அட்டவணையின் நிரல் II மற்றும் IV என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆகக் கூடிய வரையறையினைத் திருத்துவதோடு, அதே சட்டத்தின் அவ் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட III ஆம் நிரலில் காணப்படும் ஆகக் குறைந்த வரையறைகளையும் மாற்றுகின்றேன்:-

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | செலவின இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரச செயற்பாட்டு வரவிற்கான ஆகக்குறைந்த எல்லைகள் | | IV அரச செயற்பாட்டு பற்று மீதிக்கான உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | அதிமேதகு ஜனாதிபதி | 00101 | - | - | 25,000,000 | 18,000,000 | 160,000,000 | 125,000,000 | 1 |
| 2. | அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம் | 00601 | - | - | - | - | 38,000,000 | 43,000,000 | 2 |
| 3. | நீதிச் சேவை ஆணைக்குழு | 00701 | - | - | 2,100,000 | 1,600,000 | - | - | 3 |
| 4. | பாராளுமன்றம் | 01601 | - | - | 35,000,000 | 32,000,000 | - | - | 4 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5. | தேர்தல்கள் ஆணைக்குழு | 02001 | - | - | - | - | 85,000,000 | 115,000,000 | 5 |
| 6. | பாதுகாப்பு அமைச்சர் | 10301 | 245,000,000 | 150,000,000 | 223,000,000 | 45,000,000 | - | - | 6 |
| 7. | சுகாதார அமைச்சர் | 11101 | - | - | 1,250,000,000 | 1,172,000,000 | - | - | 7 |
| 8. | வலுசக்தி அமைச்சர் | 11501 | 2,000,000 | 3,000,000 | 500,000 | 2,400,000 | - | - | 8 |
| 9. | நெடுஞ்சாலைகள் அமைச்சர் | 11701 | - | - | 11,000,000 | 8,000,000 | - | - | 9 |
| 10. | கமத்தொழில் அமைச்சர் | 11801 | 95,000,000 | 50,000,000 | 55,000,000 | 19,000,000 | 315,000,000 | 150,000,000 | 10 |
| 11. | காணி அமைச்சர் | 12201 | - | - | 14,000,000 | 11,500,000 | - | - | 11 |
| 12. | கல்வி அமைச்சர் | 12601 | - | - | 1,700,000,000 | 900,000,000 | - | - | 12 |
| 13. | அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் | 13001 | - | - | 32,000,000 | 27,000,000 | 107,000,000 | 110,000,000 | 13 |
| 14. | பெருந்தோட்ட அமைச்சர் | 13501 | - | - | 15,000,000 | 9,100,000 | - | - | 14 |
| 15. | துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் | 17601 | - | - | 5,000,000 | 4,900,000 | - | - | 15 |
| 16. | தொழில்நுட்ப அமைச்சர் | 18601 | - | - | 25,000,000 | 140,000 | 100,000,000 | 2,500,000 | 16 |
| 17. | பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் | 18901 | 700,000,000 | 80,000,000 | 375,000,000 | 52,000,000 | 1,500,000,000 | 110,000,000 | 17 |
| 18. | தொழில் அமைச்சர் | 19301 | - | - | 20,000,000 | 12,000,000 | - | - | 18 |
| 19. | இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் | 19401 | - | - | 20,000,000 | 15,000,000 | - | - | 19 |
| 20. | நீர்ப்பாசன அமைச்சர் | 19801 | - | - | 10,000,000 | 8,000,000 | - | - | 20 |
| 21. | தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய மேம்பாட்டு இரராஜாங்க அமைச்சர் | 40101 | - | - | 2,000,000 | 1,200,000 | - | - | 21 |
| 22. | மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் இராஜாங்க அமைச்சர் | 40301 | - | - | 24,000,000 | 23,000,000 | - | - | 22 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23. | கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள் மற்றும் தொலைக் கல்வி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் | 40401 | - | - | 2,000,000 | 900,000 | - | - | 23 |
| 24. | அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் | 40501 | 3,000,000 | 2,500,000 | 750,000 | 300,000 | 5,000,000 | 3,200,000 | 24 |
| 25. | சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்னுற்பத்தி கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 40601 | - | - | 1,200,000 | 800,000 | - | - | 25 |
| 26. | பிரம்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப் பொருட்கள் மற்றும் கிராமியக் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் | 40801 | - | - | 28,000,000 | 12,000,000 | - | - | 26 |
| 27. | அரச பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் | 40901 | - | - | 600,000,000 | 525,000,000 | - | - | 27 |
| 28. | கம்பனித் தோட்டங்களைச் சீர்திருத்துதல், தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்கள் சார்ந்த பயிர்ச் செய்கைகள் மற்றும் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் மற்றும் தேயிலை மற்றும் இறப்பர் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் | 41001 | - | - | 5,000,000 | 1,800,000 | - | - | 28 |
| 29. | சமுர்த்தி வதிவிடப் பொருளாதார, நுண் நிதிய, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 41401 | - | - | 37,000,000 | 9,000,000 | - | - | 29 |
| 30. | சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர் | 41601 | - | - | 8,000,000 | 6,000,000 | - | - | 30 |
| 31. | பிந்திய உறவு நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் | 41901 | - | - | 700,000 | 650,000 | - | - | 31 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 32. | அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சர் | 42201 | 8,000,000 | 32,000,000 | - | - | - | - | 32 |
| 33. | வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலி மற்றும் அகழிகளை நிர்மாணித்தல் உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மீள்காடாக்கம், வனவள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 42401 | - | - | 2,000,000 | 800,000 | - | - | 33 |
| 34. | நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்குச் செய்கை மேம்பாடு, விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப விவசாய இராஜாங்க அமைச்சர் | 42501 | 18,000,000 | 3,000,000 | 4,000,000 | 2,000,000 | 50,000,000 | 20,000,000 | 34 |
| 35. | உர உற்பத்தி மற்றும் வழங்கல்கள், இரசாயன உரங்கள் மற்றும் கிருமிநாசினி பாவனை ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் | 42601 | 18,000,000 | 15,000,000 | 9,000,000 | 3,000,000 | 50,000,000 | 20,000,000 | 35 |
| 36. | கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த தொழில் இராஜாங்க அமைச்சர் | 42701 | - | - | 15,000,000 | 11,000,000 | - | - | 36 |
| 37. | கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 42901 | - | - | 1,500,000 | 1,000,000 | - | - | 37 |
| 38. | தென்னை, கித்துள் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அது சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் | 43101 | - | - | 8,000,000 | 1,000,000 | - | - | 38 |
| 39. | கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 43301 | - | - | 800,000 | 270,000 | - | - | 39 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 40. | களஞ்சிய வசதிகள், கொள்கலன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள், இயந்திரப் படகுகள் மற்றும் கப்பற்றொழில் அபிவிருத்தி இராஜாங்க | 43401 | 5,000,000 | 2,000,000 | 1,000,000 | 550,000 | 14,000,000 | 2,000,000 | 40 |
| 41. | வாகன ஒழுங்குறுத்துகை, பேரூந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க | 43601 | - | - | 5,000,000 | 800,000 | - | - | 41 |
| 42. | விமானச் சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் | 43701 | - | - | 2,000,000 | 1,350,000 | - | - | 42 |
| 43. | பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் | 43901 | - | - | 1,000,000 | 800,000 | - | - | 43 |
| 44. | இரத்தினக் கல் மற்றும் தங்க ஆபரணங்கள் சார்ந்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் | 44001 | - | - | 1,000,000 | 200,000 | - | - | 44 |
| 45. | தேசிய நூதனசாலைகள் திணைக்களம் | 20801 | - | - | 10,800,000 | 9,000,000 | - | - | 45 |
| 46. | அரசாங்க அச்சுத் திணைக்களம் | 21101 | - | - | 63,000,000 | 55,000,000 | - | - | 46 |
| 47. | கல்வி வெளியீட்டுத் திணைக்களம் | 21301 | - | - | - | - | 14,000,000 | 45,344,000 | 47 |
| 48. | தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் | 21501 | - | - | 51,500,000 | 39,000,000 | - | - | 48 |
| 49. | சமூக சேவைகள் திணைக்களம் | 21601 | - | - | 20,000,000 | 16,500,000 | - | - | 49 |
| 50. | ஆயுர்வேதத் திணைக்களம் | 22001 | - | - | 41,900,000 | 37,000,000 | - | - | 50 |
| 51. | இலங்கைத் தரைப்படை | 22201 | - | - | 2,690,000,000 | 2,300,000,000 | - | - | 51 |
| 52. | இலங்கை கடற்படை | 22301 | 650,000,000 | 450,000,000 | 447,000,000 | 250,000,000 | - | - | 52 |
| 53. | இலங்கை வான்படை | 22401 | - | - | 380,000,000 | 290,000,000 | - | - | 53 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 54. | பொலிஸ் திணைக்களம் | 22501 | - | - | 1,060,000,000 | 770,000,000 | - | - | 54 |
| 55. | சிறைச்சாலைகள் திணைக்களம் | 23201 | - | - | 135,000,000 | 105,000,000 | - | - | 55 |
| 56. | பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம் | 24101 | - | - | 3,600,000 | 3,000,000 | - | - | 56 |
| 57. | உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 24601 | - | - | 95,000,000 | 85,000,000 | - | - | 57 |
| 58. | சனத்தொகை புள்ளி விபரத் திணைக்களம் | 25201 | - | - | 38,000,000 | 34,000,000 | - | - | 58 |
| 59. | ஓய்வூதியத் திணைக்களம் | 25301 | - | - | 38,000,000 | 36,000,000 | - | - | 59 |
| 60. | மாவட்டச் செயலகம், களுத்துறை | 25701 | - | - | 72,000,000 | 69,000,000 | - | - | 60 |
| 61. | மாவட்டச் செயலகம், மாத்தறை | 26201 | - | - | 70,000,000 | 60,000,000 | - | - | 61 |
| 62. | மாவட்டச் செயலகம்/கச்சேரி, முல்லைத்தீவு | 26701 | - | - | 10,000,000 | 9,140,597 | - | - | 62 |
| 63. | மாவட்டச் செயலகம்/கச்சேரி, கிளிநொச்சி | 26801 | - | - | 11,500,000 | 11,082,392 | - | - | 63 |
| 64. | மாவட்டச் செயலகம்/கச்சேரி, மட்டக்களப்பு | 26901 | - | - | - | - | 140,000,000 | 153,000,000 | 64 |
| 65. | மாவட்டச் செயலகம், இரத்தினபுரி | 27801 | - | - | 65,000,000 | 45,000,000 | - | - | 65 |
| 66. | கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் | 28101 | - | - | 290,000,000 | 250,000,000 | - | - | 66 |
| 67. | வனவளத் திணைக்களம் | 28301 | - | - | 66,000,000 | 60,000,000 | - | - | 67 |
| 68. | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 28401 | - | - | - | - | 240,000,000 | 260,000,000 | 68 |
| 69. | கமத்தொழில் திணைக்களம் | 28501 | - | - | 210,000,000 | 202,000,000 | - | - | 69 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 70. | இலங்கை நில அளவைத் திணைக்களம் | 28801 | - | - | 134,000,000 | 128,000,000 | - | - | 70 |
| 71. | கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம் | 29101 | - | - | 9,500,000 | 8,900,000 | - | - | 71 |
| 72. | அளவுக் கூறுகள், கட்டளைகள் மற்றும் சேவைகள் திணைக்களம் | 29801 | - | - | 4,500,000 | 4,200,000 | - | - | 72 |
| 73. | உணவு ஆணையாளர் திணைக்களம் | 30001 | - | - | 3,800,000 | 3,500,000 | - | - | 73 |
| 74. | இலங்கைப் புகையிரதத் திணைக்களம் | 30601 | - | - | 540,000,000 | 430,000,000 | - | - | 74 |
| 75. | தபால் திணைக்களம் | 30801 | - | - | 775,000,000 | 750,000,000 | - | - | 75 |
| 76. | தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களம் | 31101 | - | - | 8,300,000 | 6,500,000 | - | - | 76 |
| 77. | சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் | 33101 | - | - | 250,000,000 | 210,000,000 | - | - | 77 |
| 78. | பல்செயற்பாட்டு அபிவிருத்திச் செயலணித் திணைக்களம் | 33401 | - | - | - | - | 15,000,000 | 40,000,000 | 78 |

2022.05.30 ஆம் திகதி
கொழும்பு 01.

ஒப்பம்/ ரணில் விக்கிரமசிங்க,
நிதி, பொருளாதார உறுதிப்படுத்துகை மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை — செலவினத் தலைப்பு 240 - நிகழ்ச்சித்திட்டம் 02,— † 2022 சனவரி 01 ஆம் திகதியில் ஆரம்பமாகி 2022 டிசெம்பர் 31 ஆம் திகதியில் நிறைவடைகின்ற நிதியாண்டின் பயன்பாட்டிற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது அதன் கையிருப்பிலுள்ள பணத்தொகையிலிருந்து அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினால் அதன் தற்றுணிபின் பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படுகின்ற எந்தவொரு கடன் தொகையிலிருந்தும் ரூபா அறுநூற்றுத் தொண்ணூற்றி ஐந்து பில்லியன் (ரூபா 695,000,000,000) ஐ மிகைக்காத மேலதிக தொகையொன்றினை அட்டவணையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் செலவிடப்படலாமென இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:—

**அட்டவணை**

**தலைப்பு** **240** - தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்

**நிகழ்ச்சித்திட்டம் 02** **-** அபிவிருத்திச் செயற்பாடுகள்

| | |
|---|---|
| மீண்டெழும் செலவினம் | ரூ. 395,000,000,000 |
| மூலதனச் செலவினம் | ரூ. 300,000,000,000 |
| **மொத்தச் செலவினம்** | **ரூ. 695,000,000,000** |

(ரூபா அறுநூற்றுத் தொண்ணூற்றி ஐந்து பில்லியன்.)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2022 யூன் 07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீட்டைப் பார்க்க.

* 7.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2021 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் 5(3) (ஆ) மற்றும் 30(3) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, அச்சட்டத்தின் 48 ஆம் பிரிவின் கீழ் வலுசக்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதிய 2249/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.01.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 9.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

கைத்தொழிற் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

13.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

15.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

16.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

றொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

18.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

19.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

21.

இலங்கை பட்டயப் போக்குவரத்து நிறுவனம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.